# சிங்கப்பூரில் தொழிலதிபர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை!

## முதல் பக்கத் தொடர்ச்சி...

செம்ப்கார்ப் நிறுவனம் தமிழ்நாடு அரசின் எரிசக்தி துறையுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

குறிப்பாக, pumped hydro storage திட்டங்களுக்கான வழிமுறைகளை தற்போது இந்திய அரசு எளிமையாக்கி உள்ளதால், PPP முறையில் இந்தத் திட்டங்களை தமிழ்நாட்டில் செம்ப்கார்ப் நிறுவனம், தமிழ்நாடு அரசுடன் இணைந்து கூட்டாக நிறைவேற்றிட கேட்டுக் கொண்டார்.

மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மிகுந்த அக்கறையுடன் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு புதிய முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருவதால், பசுமை எரிசக்தி உற்பத்திக்குத் தேவையான நவீன தொழில்நுட்பங்கள் தமிழ்நாட்டிற்கு தேவைப்படுவதை குறிப்பிட்டு, செம்ப்கார்ப் நிறுவனத்தின் தொழில்நுட்ப பலம் தமிழ்நாட்டிற்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

**கேப்பிட்டா லேண்ட் நிறுவனம்!**

கேப்பிட்டா லேண்ட் (Capita Land) நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் சஞ்சீவ் தாஸ்குப்தா அவர்களுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவாக்ள் சந்திப்பு.

இச்சந்திப்பின்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கேப்பிட்டா லேண்ட் நிறுவனம் பல்வேறு புதிய தளங்களில் கால் பதித்து வருவதற்கு தனது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டார்.

உலகின் மிகச்சிறந்த தொழில் நுட்பங்களை ஒருங்கிணைத்து சிங்கப்பூரில் கேப்பிட்டா லேண்ட் நிறுவனம் வடிவமைத்துள்ள 'சிங்கப்பூர் சயின்ஸ் பார்க்' போன்ற பல்வேறு பல்வேறு வகையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (Research and Development) கட்டமைப்புகளை உருவாக்குவதில் தமிழ்நாடு அரசு ஆர்வமாக உள்ளதால் அவற்றில் கேப்பிட்டா லேண்ட் நிறுவனத்தின் தொழில் நுட்ப பங்களிப்பையும் முதலீடுகளையும் அளித்திட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மேற்கண்ட நிறுவனங்களின் தலைமை செயல் அலுவலர்களுடனான சந்திப்பின் போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம், இந்நிறுவனங்களின் தலைமை செயல் அலுவலர்கள், தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் செய்வதற்கு தங்கள் நிறுவனங்கள் ஆர்வமாக உள்ளதாகவும், விரைவில் அதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வ தாகவும் உறுதி அளித்தனர்.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மிகுந்த அக்கறையுடன் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு புதிய முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருவதால், பசுமை எரிசக்தி உற்பத்திக்குத் தேவையான நவீன தொழில்நுட்பங்கள் தமிழ்நாட்டிற்கு தேவைப்படுவதை குறிப்பிட்டு, செம்ப்கார்ப் நிறுவனத்தின் தொழில்நுட்ப பலம் தமிழ்நாட்டிற்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்தார்.**

இச்சந்திப்புகளின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், சிங்கப்பூர் நாட்டிற்கான இந்திய தூதர் பெரியசாமி குமரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் தக்கார் கருமுத்து தி.கண்ணன் அவர்கள் மறைவினையொட்டி அன்னாரின் உடலுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்தபடம். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஐ.மகிழன், மாநகர் மாவட்ட நிர்வாகி சின்னம்மாள் மற்றும் பலர் உள்ளனர்.

### தூத்துக்குடி மாவட்ட முன்னாள் செயலாளர்

# என். பெரியசாமி 6-ஆம் ஆண்டு நினைவுநாள்

### வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதா ஜீவன் அறிக்கை!

*தூத்துக்குடி, மே 25-*

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் கீதா ஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தூத்துக்குடி மாவட்ட முன்னாள் செயலாளராக 30 ஆண்டுகளாக பணியாற்றி மறைந்த என்.பெரியசாமி அவர்களின் 6வது ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது.

நெல்லை மாவட்டத்திலிருந்து தூத்துக்குடி மாவட்டம் தனியாக பிரிந்த 1987ஆம் ஆண்டு முதல் தன் இறுதிக்காலம் வரை மாவட்ட தி.மு.க. செயலாராக பணியாற்றியவரும் முத்தமிழறிஞர் கலைஞரால் முரட்டு பக்தன் என்று அழைக்கப்பட்டவரும் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நம்பிக்கைக்குரிய தளகர்த்தர்களில் ஒருவருமாக திகழ்ந்தவர்.

30க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களின் தலைவராக இருந்து தொழிலாளர்களின் நலனுக்காக குரல் கொடுத்தவர். ஒரு முறை தூத்துக்குடி நகர மன்ற தலைவராகவும், இரண்டு முறை தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்து தூத்துக்குடி நகருக்கு எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்தவர். குறிப்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், கடல் சாரா பயிற்சி பள்ளி, அரசு மருத்துவக் கல்லூரி, 3வது பைப் லைன் திட்டம், பழைய பேருந்து நிலையம் சீரமைப்பு, புதிய பேருந்து நிலையம் என பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியவரும், என்னுடைய தந்தையருமான என். பெரியசாமி, அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு தினம் மே 26 வெள்ளிக்கிழமை அன்று அனுசரிக்கப்படுகின்றது.

அன்றைய தினம் காலை 10.00 மணி அளவில் போல் பேட்டையில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மலர்அஞ்சலி செலுத்தப்பட இருக்கிறது. அதன்பின் அருகிலுள்ள கீதா ஹோட்டல் மைதானத்தில் அன்னதானம் நடைபெற இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சிவகங்கை - குன்றக்குடியில்

# முரசொலி முகவர் இராம. இளங்கோவன் இல்ல மணவிழா!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

*சிவகங்கை, மே 25-*

தலைமைச் செயற்குழு உறுப்பினர், முரசொலி முகவர் பெருமங்கலம் இராம. இளங்கோவன் இல்ல திருமண விழா இன்று நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் மணமகள் இல்லத்தில் நடைபெறுகிறது.நாகை மாவட்டம் சீர்காழி ஒன்றியம் பெருமங்கலத்தைச் சேர்ந்த தலைமை செயற்குழு உறுப்பினர், முரசொலி முகவர் இராம. இளங்கோவன் அவர்களின் இல்ல திருமணம் இன்று (25.5.2023) சிவகங்கை மாவட்டம் கல்லல் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர்



ஆர் ஜி சுப்பிரமணியன், வரவேற்புரையாற்ற .சிவகங்கை மாவட்ட கழக செயலாளர், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் தலைமை தாங்க.

இராம. இளங்கோவன், இராதிகா அவர்களின் மகன் இள. பவித்ரன் டிசிஇ அவர்களுக்கும் சிவகங்கை மாவட்டம் கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் ஆர் ஜி சுப்பிரமணியன் லதா இவர்களின் மகள் சு. கிருஷ்ண வேணி மனவிழாவினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைக்க உள்ளார்கள் இந்த திருமண விழாவில் சிறப்புரையாற்ற தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மின்சாரம் மற்றும் மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில். பாலாஜி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிர மணியன், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி, சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாடு துறை அமைச்சர் சி.வீ. மெய்ய நாதன், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் கழக பொறுப்பாளர்கள் உடன்பிறப்புகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்க உள்ளார்கள். தலைமைச் செயற்குழு உறுப்பினர் இராம. இளங்கோவன் அனைவருக்கும் நன்றி கூற உள்ளார்.

# அரசு கலை - அறிவியல் கல்லூரிகள் தரவரிசை பட்டியல் இன்று வெளியீடு!

*சென்னை, மே 25-*

அரசு கலை-அறிவியல் கல்லூரிகளில் சேருவதற்கு 3 லட்சத்து 14666 பேர் விண்ணப்பித்துள்ளனர். கடந்த 8ந்தேதி முதல் 22ந்தேதி வரை விண்ணப்பிக்க அவகாசம் கொடுக்கப்பட்ட நிலையில் கல்லூரிகள் வாரியாக விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படுகிறது. மாணவ-மாணவிகள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் இட ஒதுக்கீடு அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்படுகிறது. ஒரு லட்சத்து 7395 மொத்த இடங்களுக்கு 3 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்து இருப்பதால் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ-மாணவிகளுக்கு தான் கேட்ட பாடப்பிரிவுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. கல்லூரிகள் வாரியாக மாணவர்களின் தரவரிசை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. தரவரிசை பட்டியல் அந்தந்த அரசு கலை -அறிவியல் கல்லூரிகளுக்கும் இன்று (25ந்தேதி) அனுப்புகிறது. அதனை கல்லூரி முதல்வர்கள் அறிவிப்பு பலகையில் ஒட்டி வெளியிடுவார்கள். தமிழகத்தில் உள்ள 164 அரசு கலைக் கல்லூரிகளுக்கும் தனித்தனியாக தரவரிசை பட்டியல் நாளை வெளியிடப்படும். இதையடுத்து 29ந்தேதி சிறப்பு பிரிவு மாணவர்களுக்கு கலந்தாய்வு தொடங்குகிறது. 31ந்தேதி வரை 3 நாட்கள் மாற்றுத்திறனாளிகள், விளையாட்டு வீரர்கள், முன்னாள் ராணுவத்தினரின் பிள்ளைகளுக்கு இக்கலந்தாய்வு நடைபெறும். ஜூன் 1ந்தேதி முதல் 10ந்தேதி வரை முதல் பொது கலந்தாய்வு நடக்கிறது. 12ந்தேதி முதல் 20ந்தேதி வரை 2வது கலந்தாய்வு நடைபெறுகிறது. முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு ஜூன் 22ந்தேதி வகுப்புகள் தொடங்கும் என்று உயர்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

# மெட்டா நிறுவனத்திற்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் அபராதம்!

### ஐரோப்பிய ஒன்றியம் விதித்தது!

*பிரசல்ஸ், மே 25-*

மெட்டா நிறுவனத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் ரூ.10,761 கோடி அபராதம் விதித்துள்ளத்து.

பேஸ்புக்கின் தாய் நிறுவனமான மெட்டாவிடம் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஐரிஷ் டேட்டா புரடக்ஷன் கமிஷன் (டிபிசி) நடத்திய விசாரணையில், ஐரோப்பிய ஒன்றிய பயனாளர்களின் தகவல்களை பேஸ்புக் நிறுவனம் கடந்த 2020ம் ஆண்டிலிருந்து அமெரிக்காவுக்கு வழங்கி வந்தது தெரியவந்தது.

இதையடுத்து, நீதிமன்ற உத்தரவை மீறி ஐரோப்பிய யூனியன் பயனாளர் டேட்டாவை அமெரிக்காவுக்கு அனுப்பியதற்காக ஐரோப்பிய டேட்டா புரடெக்ஷன் போர்டு (இடிபிபி) மெட்டா நிர்வாகத்துக்கு ஒட்டுமொத்தமாக 1.2 பில்லியன் யூரோ (இந்திய மதிப்பில் சுமார் ரூ.10,761 கோடி) அபராதம் விதித்துள்ளது.

இது குறித்து மெட்டா நிறுவனம் கூறுகையில், "ஐரோப்பிய யூனியனின் இந்த நடவடிக்கை நியாயமற்றது. முற்றிலும் குறைபாடுடையது. பிறநிறுவனங்களுக்கு ஆபத்தான முன்னுதாரணத்தை இது ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரத்தில் மெட்டா தனிமைப்படுத்தப்பட்டுள்ளது ஏமாற்றமளிக்கிறது" என்று தெரிவித்துள்ளது.

### புதுக்கோட்டைக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று வருகை!

# புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

*புதுக்கோட்டை, மே 25 -*

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி - புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: -

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அமைச்சராக பொறுப்பேற்று முதன் முதலாக புதுக்கோட்டை மாவட்டத்திற்கு இன்று (25.5.2023 - வியாழக்கிழமை) பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தர உள்ளார்கள்.

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கீழ்க் கண்டவாறு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதன் விவரம் வருமாறு: -

மதியம் 12.15 மணி திருமயம் தொகுதி சவேரியார் புரத்தில் சிறப்பான வரவேற்பு, 12.35 மணி ஊனையூர் விளக்கு, 12.40 மணி பெல், 12.45 மணி கடியாபட்டி விளக்கு, 12.55 மணி திருமயம் விளக்கு, 1.05 மணி சண்முகநாதன் பொறியியல் கல்லூரி, 1.20 மணி லேணா விளக்கு, 1.25 மணி டோல்கேட், 1.35 மணி நமணசமுத்திரம் கடைவீதி, 1.40 மணிஜெ.ஜெ கலை மற்றும் அறிவியல் கல்லூரி, 1.50 மணி புதுக்கோட்டை நகர எல்லையில் சிறப்பான வரவேற்பு, 2.00 மணி ரோஜா இல்லம், மாலை 6.15 மணி ஆலங்குடி தொகுதி திருவரங்குளத்தில சிறப்பான வரவேற்பு, 6.30 மணி ஆலங்குடியில் திருமண வரவேற்பு, இரவு 7.30 மணி

கட்டியாவயல் புதுக்கோட்டை,

இரவு 07:45 மணி திருவேங்கை வாசல், இரவு 08.00 மணி

முத்துடையான்பட்டி,

இரவு 8.10 மணி நார்த்தாமலை,

இரவு 08.30 மணி கீரனூரில் உள்ள புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் இல்லம்,

செல்லுதல், இரவு 08:45 மணி நல்லூர், இரவு 09.00 மணி மாத்தூர் .

இ ந் நி க ழ் வு க ளி ல் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், நகராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.

### தி.மு.க. மருத்துவ அணி

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

### மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு

கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் 30.05.2023 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா
2. அணியின் வளர்ச்சிப் பணிகள்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.05.2023

**மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மருத்துவ அணி



மதுரை கிழக்கு தொகுதி ஆனையூரில் மாமன்னர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் 1348வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், வர்த்தகர் அணி பெரியசாமி, பகுதி செயலாளர் மருதுபாண்டியன், வட்டச்செயலாளர் செல்வகணபதி, மகளிர் அணி உமா சிங்கத்தேவன் மற்றும் திரளான கழகத்தினர், பொதுமக்கள் உள்ளனர்.



பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரின் 1348 சதய விழாவை முன்னிட்டு ராமேஸ்வரத்தில் அமைந்துள்ள திரு உருவப் படத்திற்கு மாலை அணிவித்து இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம். எம்.எல்.ஏ. மரியாதை செலுத்தினார்.